**MINUTES OF THE PUBLIC HEARING MEETING CONDUCTED FOR THE PROPOSED ROUGH STONE QUARRY UNIT OF M/s THIRUPATHI GOVIND ROUGH STONE QUARRY AT S.F. NO. 416/35 (PART-3), VINNAMANGALAM VILLAGE, AMBUR TALUK, TIRUPATHUR DISTRICT ON 11.07.2025 AT 03.45PM IN M/s ASHOK MAHAL, M.C ROAD, CHENNAI – BANGALORE NATIONAL HIGHWAY, ALANKUPPAM VILLAGE, AMBUR TALUK, TIRUPAHUR DISTRICT.**

**Present:**

1. **Tmt. J. Ajitha begum** : Revenue Divisional Officer, Vaniyambadi, Tirupathur District.
2. **Thiru.Er. C. Tholkappiyan** : District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board Vaniyambadi, Tirupathur District

**The District Environmental Engineer, TamilNadu Pollution Control Board, Vaniyambadi.**

At the outset, District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Vaniyambadi has welcomed the Revenue Divisional Officer, other Government officials, NGOs, Environmentalists and all the Public present in the public hearing meeting. He briefed the project proposal of Rough Stone Quarry proposed at Vinnamangalam Village, Ambur Taluk ,Tirupathur District explaining that the above projects falls under the 'B1' Category under Schedule 1A of Environment Impact Assessment (EIA) vide Notification No. S.O 1533 dated 14.09.2006 issued by the Ministry of Environment, Forest and Climate Change as they forms a cluster of more than 5 Hectares area and therefore it is necessary to conduct public hearing meeting to obtain Environmental Clearance for the quarry project from the State Environment Impact Assessment Authority (SEIAA), Chennai.

Then DEE, TNPCB requested the Sub-Divisional Magistrate/Revenue Divisional officer, Vaniyambadi to preside over and conduct the public hearing meeting. RDO welcomed all and has informed that she was deputed by the District Collector, Tirupathur District to preside over the meeting on behalf of the District administration and explained the procedure to be adopted during the meeting and commenced the meeting.

Subsequently, District Environmental Engineer, Vaniyambadi, Tirupathur District has requested the project consultant to present the proposed project details one by one and requested the public & NGOs and others gathered in the meeting Hall to give their opinion, concerns, clarification after the presentation.

**<u>Technical Presentation, M.Vijayaragavan, Environmental Consultant, GeoTechnical Mining Solution, Dharmapuri</u>**

The Project Consultant, Geo Technical Mining Solution, Dharmapuri on behalf of Project proponent of the quarry has presented the details of the project of M/s R Janardhanan Rough Stone Quarry through power point presentation.

He explained that stone quarry of by M/s Thirupathi Govind Rough Stone Quarry at S.F. NO. 416/35 (PART-3)at an extent of 2.00.0 Hectare of Vinnamangalam Village, Ambur Taluk,Tirupathur District. He also informed that Press release for the public hearing meeting to this quarry was already published in Daily English and Tamil Newspapers ("New Indian Express" and "Dhinathanthi" respectively) was published on 07.06.2025after getting the approval of the District Collector, Tirupathur for conducting public hearing meeting on 11.07.2025 at 03.45 Pm. He also detailed the impact on Environment due to the project and Environment manage plan, requirement of man power, etc.,

**<u>District Environmental Engineer,TNPCB, Vaniyambadi, Tirupathur District.</u>**

After completion of the presentation, District Environmental Engineer has requested the public to introduce themselves with their name and village before speaking to express their suggestions, concerns and clarifications about this project and also assured that their views will be recorded both Audio & video and will be submitted to the State Environment Impact Assessment Authority (SEIAA), Chennai for further consideration for the issue of Environmental clearance.

## Thiru.Rajini, Kattukollai

He says that

- "Everyone's desire is to own a house. When seeking a bride, people ask whether the groom owns a house. I was in a rental house for the past two years. Later, my quarry manager has helped me by providing jelly and M-sand for the construction of my house. All houses located in Tirupattur district has to demolished and also stated he has stated that let us go to hut house.
- Hence I support the proposed quarry project".

## Thiru.Arivazhagan, Social Activist, Tirupathur

He says that,

- "There are 242 village Panchayats in Tirupattur District, where underprivileged people live. Government leaders know their needs. Further stated that quarry owners have helped to provide building, compound walls and other amenities for the nearby schools.
- I request permission to allow the proposed quarry project ".

## Thiru.Mugilan,Sennimalai, Environmental Protection Movement

He says that,

- "As per official records, a house is located 427 m away from the proposed quarry of M/s.Thirupathi Govind Quarry. Hence, permission cannot be granted.
- RDS Infrastructure Quarry has already excavated the minerals from the proposed area before approval, which is clear from the plan.
- Air quality was measured at six locations (Oct–Dec 2024). Soil, noise, and water not required electricity, but air monitoring need electricity. There is need to confirm electricity usage for pollution measuring equipment.They should ensure electricity usage for monitoring air survey. Photos were submitted but pollution level was not measured.
- Quarries have to offer PF, ESI, and insurance for more than 10 workers. But from the RTI reply received from the Labour Department shows no PF or ESI was given to any of the workers in quarries.
- As per the TNPCB's 2020 report, the quarry located area comes under "overexploited" for water resources. Archaeological markers do exist within 500 m and there is no proper 300 m buffer zone provided in the mining plan

report. Quarry operations should be carried out from 7 am –5 pm, but local says that the activity continues beyond 5 pm which is illegal.

- RDS Infrastructure Quarry began extraction before getting permit and action must be taken.
- Maps confirm the proposed six quarries violate the laws and permission must be denied.
- Import sand from abroad to protect Tamil Nadu's resources".

**Thiru.Saravanan, Kamiyanpettai Pudur**

- " M/s.RDS Infrastructure Quarry has not illegally excavated minerals from the proposed quarry area. Thiru.Gunavalan had already leased and operated the quarry site for the past 5 years which was clearly shown in the google map. However, RDS has not excavated any new stones from the proposed area and is applying for lease at the already quarried area.
- The information presented by the previous speaker(Thiru.Mugilan) appears to be incorrect".

**District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Vaniyambadi, Tirupathur District.**

District Environmental Engineer thanked the Revenue Divisional Officer and all the public and NGOs who have participated in the public hearing meeting and the meeting came to the end.

**Enclosures:**

1. Copy of press release (Public Notice published in the Daily Newspaper Tamil & English) for notifying the public hearing meeting.
2. Copy of attendance sheet of the public hearing (Total pages 10 & 71 persons).
3. Copy of Audio & Video (DVD – Disc 1& Pen drive) of the public hearing proceedings.

24/07/2025

District Environmental Engineer,
TamilNadu Pollution Control Board,
Vaniyambadi, Tirupathur District.

24/07/25

Revenue Divisional Officer,
Vaniyambadi,
Tirupathur District.

**திருப்பத்தூர் மாவட்டம், ஆம்பூர் வட்டம், விண்ணமங்கலம் கிராமம், அரசு நிலம் ச.எண்.416/35 (பிரிவு-03), 2.00.0 ஹெக்டர் பரப்பளவில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள திரு.திருப்பதி கோவிந்த் கல் குவாரி நிறுவனத்தின் திட்ட பணிக்கு பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் 11.07.2025 பிற்பகல் 03.45 மணியளவில் தி/ள். அசோக் மஹால், M.C. ரோடு, சென்னை-பெங்களூர் தேசிய நெடுஞ்சாலை, ஆலங்குப்பம் கிராமம், ஆம்பூர் வட்டம், திருப்பத்தூர் மாவட்டத்தில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கை விபரம்:**

**பங்கேற்றோர்:**

திருவாளர்கள்

| | | |
|---|---|---|
| 1. | திருமதி. J. அஜிதா பேகம் | வருவாய் கோட்டாட்சியர்,<br>வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம் |
| 2. | Er. சி. தொல்காப்பியன் | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம் |

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், வாணியம்பாடி**

வருகை புரிந்துள்ள மாவட்ட வருவாய் கோட்டாட்சியர் /(Sub Divisional Magistrate), வாணியம்பாடி அவர்களை வரவேற்று,

திருப்பத்தூர் மாவட்டம், ஆம்பூர் வட்டம், விண்ணமங்கலம் கிராமம், அரசு நிலம் ச.எண்.416/35 (பிரிவு-03), அரசு நிலம் 2.00.0 ஹெக்டர் பரப்பளவில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள் திருப்பதி கோவிந்த் கல் குவாரியை இயக்குவதற்கு மாநில சுற்றுசூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தின் சுற்றுசூழல் அனுமதி பெறும் பொருட்டு பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் இன்று நடைபெற உள்ளது. சுற்றுசூழல் பாதுகாப்பு சட்டம் மற்றும் சுற்றுசூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை

2006ன் படி 5.00 ஹெக்டேர் பரப்பளவிற்கு மேல் கற்களை வெட்டி எடுப்பதற்கு சுற்றுச்சூழல் அனுமதி பெற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடத்தி பொதுமக்கள் மற்றும் சமூகநல ஆர்வலர்களிடம் கருத்துகளை எழுத்து மூலமாகவோ, வாய் மொழி மூலமாகவோ பெற்று அதனை பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்ப வேண்டியது அவசியமாகும். இது தொடர்பாக மாவட்ட ஆட்சியரின் தி/ள் திருப்பதி கோவிந்த் கல் குவாரி நிறுவனத்திற்கு பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் தி/ள். அசோக் மஹாலில் 11.07.2025 அன்று பிற்பகல் 03.45 மணியளவில் நடைபெறுமென நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் மற்றும் தினத்தந்தி செய்திதாள்களில் 07.06.2025 அன்று பொது அறிவிப்பு வெளியிடப்பட்டது. இக்கூட்டத்தில் தொழிற்சாலை நிர்வாகத்தினர் தொடங்க உள்ள தொழிற்திட்டம் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு சம்பந்தமான விவரங்களை உங்களுக்கு விரிவாக எடுத்துரைப்பார்கள். அதன் பின்னர் பொது மக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் தங்களது கருத்துகளை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ தெரிவித்துக்கொள்ளலாம் என கேட்டுக்கொண்டார்.

இக்கூட்டத்திற்கு மதிப்பிற்குரிய வருவாய் கோட்டாட்சியர் / (Sub Divisional Magistrate), வாணியம்பாடி அவர்களை தலைமையேற்று நடத்தி தருமாறு அன்புடன் கேட்டுக்கொண்டார்.

**தொழில்நுட்ப விளக்க வல்லுநர்**, எம்.விஜயராகவன், சுற்றுச்சூழல் ஆலோசகர், ஜியோ டெக்னிக்கல் மைனிங் சொல்யூஷன், தர்மபுரி, தி/ள் திருப்பதி கோவிந்த் கல் குவாரி திட்டம் தொடர்பாக விளக்கவுரையை எடுத்துரைத்தார்.

**<u>மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், வாணியம்பாடி</u>**

பொதுமக்கள் தங்கள் பெயர், ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை தெரிவிக்கலாம். தங்களுடைய கருத்துகளை முறையாக பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க

மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொண்டார்.

**திரு. ரஜினி, காட்டுக்கொல்லை**

- ஆண் பெண்களின் முதல் ஆசை வீடு கட்டுவதே.
- இந்த காலகட்டத்தில் பெண் பார்க்க சென்றால் சொந்தமாக வீடு இருக்கிறதா? என கேட்கிறார்கள். இருந்தால்தான் பெண் தருகிறார்கள்.
- நான் 2 வருடங்களாக வாடகை வீட்டில் இருந்தேன். பின்பு என் மேனேஜரிடம் கேட்டதற்கு எனக்கு குவாரி மற்றும் ஜல்லி உரிமையாளர் ஜல்லி, M–Sand இலவசமாக வீடு கட்ட கொடுத்து உதவினார்.
- திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து வீடுகளும் இடித்துவிட்டு குடிசை வீட்டிற்கு சென்றுவிடலாம் என்று கூறினார்.
- எனவே குவாரி வேண்டும்.

**திரு. அறிவழகன். சமூக ஆர்வலர், திருப்பத்தூர்**

- திருப்பத்தூர் மாவட்டத்தில் மொத்தம் 242 ஊராட்சி கிராமங்கள் உள்ளன. அதில், ஏழை, எளியோர், பிற்படுத்தப்பட்ட மக்கள் வசிக்கின்றனர். அவர்களுக்கு என்ன தேவை என்பதை ஆட்சியை ஆளக் கூடியவர்களுக்கும் மத்தியில் ஆளக் கூடியவர்களுக்கும் தெரியும்.
- பள்ளிகளுக்கு தேவையான காம்பவுண்ட் சுவர் மற்றும் அனைத்து வசதிகளும் குவாரி உரிமையாளர்கள் செய்து கொடுக்கின்றனர்.
- எனவே குவாரிகளை அனுமதிக்க வேண்டும்.

**திரு. முகிலன், சென்னிமலை, சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்கம்**

- தி/ள் திருப்பதி கோவிந்த் குவாரியிலிருந்து 427 மீட்டரில் வீடு இருக்கிறது, இதனை அரசு ஆவணம் உறுதி செய்கிறது. எனவே இந்த குவாரிக்கு சட்டப்படி அனுமதி தர முடியாது.

- RDS Infrastructure குவாரி தற்சமயம் அனுமதி கோரியுள்ளார். ஆனால் குவாரி அனுமதி பெறும் முன்பே சட்ட விரோதமாக கனிமங்களை வெட்டி எடுத்துள்ளனர் என்பது திட்ட விளக்கத்தின் வரைபடத்திலிருந்து தெரிகிறது.
- எனவே T.G. கோவிந்த் குவாரிக்கு அனுமதி தர முடியாது,
- காற்று மாசு 6 இடங்களில் அளந்தோம். 3 மாசும் (Oct 1–Dec 2024 ) மண், ஒலிக்கு, நீருக்கு மின்சாரம் தேவையில்லை. ஆனால் காற்று மாசு அளவு தெரிய மின்சாரம் வேண்டும்.
- மின்சாரம் ரீடிங் ஆதாரங்களை ஒப்பிட்டால் தெரிந்து விடும்.
- புகைப்படம் மட்டுமே வைத்துள்ளனர். மாசு அளக்கவில்லை.
- S.C.No மின்சாரம் எடுத்தோம் என கூற வேண்டும்.
- குவாரி தொழிற்சாலைகளுக்கு 10க்கு மேற்பட்டவர்களுக்கு PF, ESI, VSIA, Insurance வழங்கப்படும் என்கிறார்கள்.
- திருப்பத்தூர் மாவட்டத் தொழிலாளர் துறையிடம் PF, ESI. Insurance குறித்த விவரங்கள் கேட்டபோது எந்த கல் குவாரியிலும் தொழிலாளர்களுக்கு PF, ESI. Insurance எதுவுமே கிடையாது என்ற தகவல் கிடைத்தது.
- தண்ணீர் கிடைக்கும் என்று கூறுகிறார்கள், ஆனால் மாசு கட்டுப்பாடு வாரியத்தின் TNPCB & You 2020–ல் குவாரி அமைய உள்ள இடம் overexploitation of water area –ல் உள்ளது.
- மாசு கட்டுப்பாடு வாரியம் வெளியிட்ட 2020 புத்தகம் மாதனூர் குறுவட்டம் மற்றும் ஆம்பூர் வட்டம் பகுதிகளில் overexploitation of water என பதிவேட்டில் தெரிவிக்கப்படுள்ளது.
- 500 மீட்டர் தூரத்தில் தொல்லியல் சின்னம் இல்லை என்று சொல்வது தவறான தகவல்.
- குவாரியின் 300 மீட்டர் சுற்றளவிற்கான வரைபடம் ஏதுமில்லை,
- காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை தான் குவாரிகள் இயங்க வேண்டும், ஆனால் அவ்வாறு இயக்காமல் 5 மணிக்கு மேல் எடுத்துச்செல்வதாக ஊர்மக்களே தெரிவிக்கின்றனர். அவ்வாறு எடுத்து செல்வது சட்டத்திற்கு புறம்பானது.

- RDS Infrastructure குவாரி அனுமதி வழங்குவதற்கு முன்னதாகவே கனிமங்களை வெட்டி எடுத்தது திட்ட வரைபடத்தில் தெரிகிறது, இதன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- கிராம வரைபடம், புல வரைபடம், கூகுள் வரைபடம் அரசு ஆவணங்களை வைத்து சட்டத்திற்கு புறம்பாக இருக்கிறது என்று கூறி இந்த 6 குவாரிகளுக்கும் சட்டப்படி அனுமதி அளிக்கக்கூடாது என தெரிவித்துள்ளார்.
- வெளிநாட்டிலிருந்து மண் இறக்குமதி செய்து தமிழ்நாட்டின் கனிம வளத்தைக் காக்க வேண்டும்.

**திரு, சரவணன், கம்மியன்பேட்டை புதூர்**

- தி/ள் RDS Infrastructure குவாரி சட்ட விரோதமாக கனிமத்தை வெட்டிஎடுக்கவில்லை, அங்கு ச.எண். 419 பின்புறம் குணவாளன் என்பவர் ஏற்கனவே குவாரி 5 வருடங்கள் குத்தகைக்கு எடுத்து கல் உடைத்திருக்கிறார்.
- RDS என்பவர் புதியதாக அமைய உள்ள கல் குவாரியில் எந்த ஒரு கல்லையும் எடுக்கவில்லை, ஏற்கனவே கல் எடுக்கப்பட்ட குவாரியை தான் தற்போது குத்தகைக்கு எடுத்து நடத்த அனுமதி கோரியுள்ளார். இதற்கு முன் பேசியவர் (திரு. முகிலன்) தவறான தகவல்களை தெரிவித்துள்ளார்.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், வாணியம்பாடி**

தி/ள். திருப்பதி கோவிந்த் கல் குவாரி நிறுவனத்தின் கருத்துகேட்பு கூட்டம் நிறைவுபெற்றதாக தெரிவித்துக்கொண்டார்.

இந்த கருத்து கேட்பு கூட்டத்தை சிறப்பாக நடத்தி கொடுத்த வருவாய் கோட்டாட்சியர் /(Sub Divisional Magistrate), வாணியம்பாடி அவர்களுக்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மற்றும் பொது மக்கள்

சார்பாக நன்றியை தெரிவித்துக்கொண்டார். இந்த கூட்டத்திற்கு வருகை புரிந்திருக்கும் வட்டாட்சியர் அவர்களுக்கும், பொது மக்கள் மற்றும் பத்திரிக்கை நண்பர்கள் அனைவருக்கும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் சார்பாக நன்றியை தெரிவித்துக்கொண்டார்.

**<u>இணைப்பு:</u>**

1. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்ட விவரம் பத்திரிக்கை நகல் (தமிழ் மற்றும் ஆங்கிலம் நாளேடுகள்)
2. பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டத்தில் கலந்த கொண்டவர்களின் வருகை பதிவேடு நகல் (மொத்த பக்கம் 10 மற்றும் நபர்கள் 71)
3. பொது மக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்தின் குறுந்தகடு நகல்

24/07/2024

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம்.

24/07/24

வருவாய் கோட்டாட்சியர்,
வாணியம்பாடி
திருப்பத்தூர் மாவட்டம்